உ

வேலு மயிலுந்துணை

இஃது

திரிசிரபுரம்

நாகப்பிள்ளை குமாரரும்

பெங்களூர்

ஆதிஹிந்து விநோதசபையின்

ஸ்டேஜமானேஜர்

மு— சுப்பராய ஆசாரியவர்கள்

மாணாக்கரிலொருவருமாகிய

# நாராயணசாமிபிள்ளை

அவர்களால் இயற்றப்பட்டு

கொழும்பு

கா. முருகேசபிள்ளையால்

அமராவதிபிரஸில் பதிப்பிக்கப்பட்டது

1895

Digitized by Roja Muthiah Research Library

Digitized by Roja Muthiah Research Library

வேலு மயிலுந்துணை

# சரசசல்லாப ஜாவளி

வெண்பா

சேடனுந் தாங்குஞ் செயதிரு பூவிலகும்
ஆடரும் வியக்க அண்புகொண் டுபெருஞ்
சரசசல் லாபமெனுஞ் ஜாவளியை—பாடுதற்கே
கரிமுகவன் பூம்பதமே காப்பு.

## இலகைநகர் வாழத்தல்

இலங்கை நகர்வாசிகளே வந்தனம்

மங்களமாயொளிர் மலைமகள்நேசனை
துவகமுடன்பூசிக்குந் தூயரா—மிலங்கை
ஆகமவேதபுராண கலைமுதல்
சோகமிலாதுணர்ந்த தீரரா—மிலங்கை
ஒறிந்துவிநோதசபை யெழிலுளநாடகத்தின்
மைந்தர்கள் பிழைமறுத்தாளவே—இலங்கைநகர்வாசி

## இராணிவாழ்த்தல்

அன்னையெம்பிரஸ் ராணியே நமோ நமோ
தண்ணமர்குண விண்மணியென மன்னவரெவரும்
சாற்றும்பூவே தனையபோற்றிரேம்.
ராஜ ராஜ சேகரி தயாபரி
பூஜிதமுடன் காமினியோர்கள் நேசமாயுமை
போற்றும் விக்டோரியா புண்யதாயகி
எத்திசைபுகழ் யிறைவியேக்ருபாகரி
உத்தமிபரிசுத்தமாயொளிர் சத்யசீர்மையில
ஓங்கும்நின் கீர்த்தியென்றும் வாழ்கவே

## இதுவுமது

எங்களெம்பிரஸதாயே நீரென்றும்வாழ்கவே
மங்களமாகநின் மைந்தரும்வாழ்கவே
இசகையின்றி மன்னர்தரைமீதுய்யவே
ங்ங்களில்மும்மாரி செழிப்பாய்பெய்யவே

விண்ணுமண்ணைவும் விக்டோரியா வாழ்கவே
எண்ணருமிலங்கையோ ரென்றும்வாழகவே
மனோகரமயிம்மானிலம் வாழ்கவே
விநோதசபையெங்கும் விளங்கவாழ்கவே

பெண்கலை ஜாவளி

மன்னனின்னம் வரக்காணகிலேனென்றன்—மன்
மதிமயங்குரேனே அழைத்தோடிவாராய்—மன்
இன்னம்வேறொருவள்மே லிச்சைகொண்டேயங்கு
யிருக்கின்றுரோதெரியேன் என்னுசையா—மன்னன்
அன்பனே நீசென்று அங்கிவிரமாயின்று
இன்பனைக்கூட்டிவாருய் எனக்கினிய—மன்ன
ஆருந்துணையில்லையேஆய்தென்தொல்லையே
நாராயணசாமி நவில்பதம்பாடு—மன்ன

ஆண்கலை லாவணி

அருமையாய்வீற்றிருக்கும் ஆரணங்குஇவளாரோ
என்போலாடவர்க்காய் பிரமனவனியிலிவளைப் படைத்
கருங்கூந்தலுள்ளகட்டழகியை நான்கண்டு என் (தாரோ
கருத்துமாறுதிந்த காசினிலிதைப்போலெங்குண்டு
மனமதன்பரிவுகொள்ளும் பெண்டோ
மங்கையேவுனக்கு மிடையுண்டோ—அடி
மாதரசேயுன்னைக்காத லோடுநான்
மருவியணையயிதுகாலமடி யினியிங்கு—அருமை
பாரிலுள்ளமாதர்கள் யிவளுக்கிணையல்ல—இவள்
பார்க்கஎழில்லை அரும்பெனலாமிவள்சொல்லோ
சீரிலுயர்ந்ததேன்பா ருங்கற்கண்டுமல்ல
தேவர்கள்புசித்த திகட்டாஅமிர்தமாம்நல்ல
மதிமுகமபடைத்த யிந்தமாது—இவண்
மயங்கிடும் காரணமேது-என்
மனதைப்போலிவள் கனமதாயணைய
வருகுவாளோ நாருயணசாமிபதம்பாடி

பெண்கலை ஜாவளி

துரைவரக்காணேநான் என்செய்குவேனென்
குறையேதவருக்கு கோதைசெயதேனே
கோளுரைகேட்டு கோபித்தாரோதுரை
மதிதனைலாகுதே மங்கையுடல்வேகுதே
மனனனைக்காண மனநாடுதே-துரை

Digitized by Roja Muthiah Research Library

நாராயணசாமி நற்பதமபாடுங்காமி
நானொப்பாருமல் நாள்போகுமோஎன்-துரை

ஆண்கலை லாவணி

சகியே யின்னம்ஜாலமோ
சங்கையன்றி சேரவே

திருவாய்மாரன் வாளிருல்
பொருமியென்னை ஜாடுருன்
வெர்ருக்கயென்று லாகாது
பூவையேகாலம் போகுது--சகி

அருமையாமிவ்வனந் தனில்
அன்னமே நாமிருவரும்
பெருமையோ டணையவே
பெண்மயிலே காலமே-சகி

சினந்தென் றணைபபாருதே
சேவலதோ கூவுதே
மனங்கனிந் தெனையாளவே
மாதரசே வேண்டினேன-சகி

பெண்கலை ஜாவளி

கண்ணுளாவுன்னைக்கூட காதலாகுதென் செய்வேன
எண்ணுதுமெண்ணிமனம் ஏங்குதேவுன்னுல்பதியே
ஏதினிநாளெனனுலாகாது நீகெதியே-கண்

ஆசையாகினுனவந்தேனே அணைகுவாயடாஎனகோனே
அனங்கன்வேதனையைதாளஆகாதெங்குயவேனதானே-க

நங்கையர்மகிழுநாதாநாகரீகமுள்ளபிரக்கியாதா
நாருயணசாமியினற்கவிக்கு ருகும்போதா-கண்

ஆண்கலை பெண்கலை தர்க்கஜாவளி

ஆண்
கண்மணியே வுந்தனமீது
காதல்மிகமீறுதே
பெண்மணியே மாரனுல்
பேதையுடல் சோறுதே
பெண்
மையலோங்கினு லெனனடா
மருவ னாமென சாமியே

Digitized by Roja Muthiah Research Library

வையமீ துனனு ைசயால்
வாடுரேநான காமியே

ஆண்

ஜலாம்செய்ய லாகாது
சரசிகாலம் போகுது
மாலெதெனறலேங்கு தே
மையல்மிகவோங்குதே

பெண்

செவ்விதழ்கடித்துயென்னை
சேர யேனோமோடியே
வொவ்வியிருபேருங்கூடி
வொய்யாரமாய்லீலையாடி

ஆண்

லீலைமனக்காரியே
வாலைபருவநாரியே
வேலைநிகர் கண்ணுளே உனை
வேண்டிவந்தேன மின்னுளே

பெண்

மினனுளெனறமன்னவா
மேதினியில்நனனவா
உனனதமாய் நாராயணசாமி
பதம்பாடியே

ஆண்கலை பெண்கலை தர்க்கம் ஜாவளி

பெண்

சுந்தரா சந்திரா

சுகுணவிலாசனேசா சேரயினிவாடா

கொந்தலர்மாமலர் சூடியேநாம்
குலவியாடவே சமையமேதுரையே

அருவாமாய் ரதிமாரனும் போல்
இன்துடனகலவிகள் நாம்செய்யவே

தருணமேமருவவே நீதயைபுரி
தங்கமேயென துடலினிதளருதடா. சுந்

ஆன்

அன்னமே சொன்னமே
அணையினிஜாலமேன் ஆவலுடனென்னை

Digitized by Roja Muthiah Research Library

கன்னல்வில்லோன் கணையால்தினமும்
கலங்குறேன்டி கருணை நீசெய்வாய் அன்

இருவருமாய் ரதிமாரனும்போல்
யினிதுடன்கலவிகள் நாம்செயவே
தருணமேமருவவே நீதயைபுரி
தையலேவிரகமதினி சகியேன் அன்

ஆண்

மாதரசேவுன்னை சணடபோதே
மன்மதன் கணையிலையடிகோதே
மயங்கிவாடுமென்தன்மையல் தணிக்கவேநீ
மனமுவந்தருள் செய்வாயிடபோதே

அழகியமுகமுந்தன் அருள்தனமதையுநான்கண்டு
ஆவல்கொண்டு அலையுரனே
அன்னமேவுன்றலெந்தன் றவியும்போவதுண்டு
தழைத்தொளிரும் விநோதசபையிலெனையணைய
தயவுசெய்தாலுனக்கு சுகிர்தமுண்டு

காருர்குழலுடையகண்மணியேஇங்குவா
கலந்தாடிகனனியேநாம் கனம்பெறவே
காதல்நீக்குவோ மினியேன்மோடி
காருயனசாமி நவிலுங்கீதமதை
காயகிமகிழ்வதாய் நாம்பாடி-மாதர

பெண்

இந்தமோடிசெய்வ துனக்கேர்க்குமோயினிஎன்சாமி
வந்தனஞ்செய்குறேன்துரை யேவருகுவாயடாநான்சாமி
வருகுவாயடாநான்சாமி தருகுவாயோர்முத்தம்சாமி
நல்லநாளிதலாலுன்னை நாடிவந்தேணடாயென்னை
அல்லல்செய்யுதடாதுநீ அனங்கன் வேதைதாளேனினி
நாருயணசாமிதன் நவிலுவேன்டாநிதம்
காரிழைமனஞ்சோரியே கலங்குரேனுனைக்கோரியே

ஆண்

ரதியோ விணணின்மாமதியோ
கதிதரும்பதியோ தவமுயர்நிதியோ
அதிஆவலளித்தசதியாரறிகிலேன்
மதிமால்புகழும் பார்வதியோ
வணடோயிருவிழிசேணடோதடமுலை
வுண்டோஇவட் கிடையுண்டோ

தண்டாமரையடிநண்டோர்முழுந்தான்
கண்டோஅதரங்கற் கண்டோ

தானேஇலக்குமி தானேசரஸ்வதி
தானேமருமலர்தேனே
வானோர்குமரி தானேயிவளெழில்
நானேபுகல்வது தானே

பெண்

சரசாமோகமானேன் சற்குணமுனே - ச
பருவமிதுவேயெனை பட்சமாய்சேர- ச
தரைமீதிலுனக்கிணை சாமிநான்காணேன்
குறையேயென்றனுடனே கூடத்துரையே

ஆண்

மயிலேதாமதமேன் மனோரஞ்சித மயி
அயில்விழியாளே நீ ஆவலாய்சேர-மயி
மாமரக்குயிலே மங்கையர்க்கொயிலே
மீதமலர்சோலையிலணைய சகியேதாமத

பெண்

சுந்தரவதனே சொல்லரும்மோகனு
சந்தேகமென்னடாசாமி இனிமேல் - மோக

ஆண்

உருவிலான்கணையால் வொடுங்கினேனுகை
தருணமீதென்னுடன கூடசாகி (யால்

பெண

நங்கையாலோலாநளி மலர்காலா
நாராயணசாமிசொல் நாடிபுவிமேல்
கோ
காதிலங்தேன் என்னை கூடிடவாராய்
கோதைமனமேனு காமற்சேராயுனை . கோ

பாரிலுனைப்போலெங்கும் பார்த்தறியேனே
பங்கமவைத்தெந்தனைய் பாரும்நானுந்தனை
தங்கக்கிணணம்போன்ற கொங்கைகள்விம்முதே
தயவுசெய்யடாகோடி சரணஞ்செய்குவே
மாரன்விடுங்கணையெனமார்பை துளைக்குதையோ
நாராயணசாமியினற் பதம்பாடுமேனே கோ

ஆண்

அடிசகியே நானுனையிம்போது
அணையாவிடிலாவியுந் தரியாது

Digitized by Roja Muthiah Research Library

படியிஞேர்காண முன்னின்றுங்கொண்டு
பார்ப்பதேன் அதரகனியதுண்டு.

கடிதமிழ்நின்னுடைய ஸதனமிரெண்டு
கண்டெனமிட்டுதே வார்பிரண்டு
வடிவழகியெதநனை வோதியுமுந்தன்சித்தமும் (தகாது
இரங்காதேதென்னபுதுமையிது மங்கையேமோடிசெய்யத்

பச்சிளங்கிள்ளையை ஏந்தன்மீது
பரியாவிடில் பாபமதகலாது
நச்சணிநாதனு மேமகிழ்வார்
நலந்திகழ் முனிவருமே புகழ்வார்
உச்சிதஸாஸகணனுட்டியெவினை
உகர்திடில்வுலகம் புகழுமுன்னை
கொச்சை மொழு கொகில
மனைத்தனை வானுலகதியிலுறை
கொமளமேமானே கொற்றவி
கொடும்பிணியா வேனே .அடிசகி

பெண்

அடம்வீடுமுன்னை அடைந்தாயென்னை ஆதரியுஞ்சாமி
மடந்தையர் மகிழ்மாரனே ஒ
மையல் தீர்க்குாலமேனோ மங்களகுணனா (அ

மாரன்மலர்வாளி யென்னைவாட்டுவதுஞ் சரியோவுன்னை
கோரினேனே மனதுதன்னை
கூட்டிச்சேர் நீ கொண்ட (அடம்

நாராயணசாமி பாரில்
நற்புதத்தில் ஓங்கிகூடுமே
நாணம்விட்டு குலாவியாடும்
நாதனே நீர் கொண்ட (அடம்

ஆண

பளதிரக் கொங்கையாளே
படர்ந்த மதிமுகத்தாளே உன்னை
பார்த்துமையல் மீறுதடி
பன்னரும் விநோதசபையில் அன்னமே பன்னரும்

பெண

பன்னரும் விநோதசபையில் பார்த்தென்னைமோகித்த
கணனாவிடடைந்து (என்
கலந்துநாமாடலாமே கணனுனா கலந்து

Digitized by Roja Muthiah Research Library

ஆண்

வீட்டைவதற்கு முன்னம்
வீணமணியே யுன்னால்வந்த
விரகந்தனை சகிக்க
மின்னரசே கூடாதடி அன்னமே மின்னர்

பெண்

கூடாதென்று நாமிங்கு
கூடுவதால் பழிச்சொல்லாகும்
நாடோர்களேசுவார்கள்
நல்லதல்லடா என்சாமி கேனறுளா நல்ல

ஆண்

ஏசுவதால் வந்ததென்ன
எந்திழையே நாமிருவர்
வீசுங்கமிழ் வாசமுடன
மெல்லியே சுகிப்போமடி அன்னமே மெல்லி

பெண்

சுகிக்கத்தடை யென்னடா
துரைசாமி நமதில்லத்தில்
சொல்லும் நாராயணசாமி
சுகிர்தமுள்ள கீதம்பாடி

பெண்

சாமிவாடா வந்தென் மையல் தீரடா
காயியாடேனன் யெனனைக்கட்டிசேரடா சாமிவாடா

மானேஇன்னம் யென்மீதனக் காசையோ
தேனேநீயோபொருள்வாங்கும் வேசியோ மானே

வேசியென்றுரைக்காதே மெல்லியின்தேவியே
வேதனைச்செய்குறுன் மதனதாவியே சாமி

வேதனைசெய்வதால் வேண்டுகிறாயோயென்னை
மேதினியில்நம்பப்போமோ வுன்னையே மானே

மேதினியிலுன்னை விட்டுபிரியேன்
வாதுசெய்யாதடா பிரியமன்னனை சாமி

மன்னவனென்றென்னை மயக்க ஓ கூடியே
பன்னாருயணசாமி பதம்பாடியே மானே

Digitized by Roja Muthiah Research Library